தினகரன்



### பணியின் போது இறந்த

# பனியன் நிறுவன காவலாளிக்கு ரூ.2.64 லட்சம் நிலுவை தொகை




▶ திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் காவலாளியாக பணிபுரிந்து பணியின் போது உயிரிழந்த வடிவேல் குடும்பத்தினருக்கு நிலுவை தொகையாக ரூ.2 லட்சத்து 64 ஆயிரத்து 756 வழங்கப்பட்டது.

**திருப்பூர், அக். 10:** தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு பணப்பயன்களின் ஒரு அங்கமாக நீண்ட கால உதவி தொகைகளான உதவித்தொகை மற்றும் சார்ந்தோருக்கான உதவித் தொகை பணியில் விபத்து நடந்த நாளிலிருந்தே வழங்கப்படுகிறது. அதன்படி, திருப்பூர் கொங்கு பிரதான சாலையில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ அலுவலகத்தில் திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் காவலாளியாக பணிபுரிந்து பணியின் போது உயிரிழந்த வடிவேல் குடும்பத்தினருக்கு நிலுவைத்தொகையாக ரூ.2 லட்சத்து 64 ஆயிரத்து 756 வழங்கப்பட்டது.

மேலும், மாதாந்திர உதவித்தொகையாக ரூ.13,160க்கான ஆணை வழங்கப்பட்டது. இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தின் பொறுப்பு இயக்குனர் கே.ஆர்.ரவிக்குமார் மற்றும் மேலாளர் நித்யா உள்ளிட்ட அதிகாரிகள் இதனை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்ட தொழிற்சாலையின் மனித வள மேம்பாட்டு துறை அதிகாரிகளும், பலன் அடைந்தோரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பல்வேறு பலன்களை பற்றி தெரிந்து கொண்டனர்.